திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் குறிப்பிட்ட இரயில்வே தொழிலாளி, அருள் செல்வராஜ் என்பவர் மன நோய் உள்ளவராக இருந்து, தன்னுடைய குழந்தையையே தூக்கி எறிந்த குற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு அம்மாதிரியான டென்டன்சி இருக்கும் என்பதைக் கருதி, சரியான பாதுகாப்பு ஏன் அவருக்குக் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில்தான் அவரைத் தனியாக ஒரு அறையில் வைத்துக் கண்காணித்து வந்திருக்கிறார்கள். ஆனால், உணவு அருந்தச் செல்லும்போது அவர் பையத் தப்பித்துச் சென்று, பக்கத்திலுள்ள விக்கெட் கேட்டைத் திறந்து கிணற்றில் விழுந்துவிட்டதென்பது எதிர்பாராது நடந்துவிட்ட நிகழ்ச்சியாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக இது பாதுகாப்பு ஏற்பாட்டுக்கு உரிய பிரச்சினையாக இருப்பதால், இதற்காக அது சம்பந்தப்பட்ட வார்டர் போன்றவர்களை சஸ்பெண்டு செய்வதனால் இதற்கு ஒரு பரிகாரம் தேடுவதாக இருக்காது என்ற முறையில் அப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல், ஜெயிலுக்குள்ளே இருக்கக்கூடிய கிணறுகளை இன்னும் சற்று அதிகப் பாதுகாப்போடு வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஜெயிலில் கம்பிகளெல்லாம் போட்டுதான் வைத்திருக்கிறார்கள். மூடப்பட்ட கிணறுக்குப் போவதற்கு விக்கெட் கேட்டும் போட்டுத்தான் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னதைப் போல், ஏதோ எதிர்பாராத விதத்தில் நடந்துவிட்டதற்காக அங்குள்ள வார்டரைப் பழி வாங்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தும். என்றாலும் முறைப்படி அவர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டு, விசாரணை செய்து முடிவு எடுப்பார்கள்.

Loans from Commercial Banks

* 626 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total amount of loan borrowed by the Government from Commercial Banks during 1967–1970;

(*b*) the rate of interest and mode of repayment; and

(*c*) the details thereof ?

1973 ஏப்ரல் 5]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ-இ) விவர அறிக்கை யொன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஆண்டிப்பட்டி குடிநீர் வழங்கு திட்டம்

*627 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

வைகை அணையிலிருந்து ஆண்டிப்பட்டிக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்கான நீர் வழங்குத் திட்டத்தின் ஆய்வு முடிக்கப்பட்டு, பொது விவரச் செயற்குறிப்புகள் இப்பொழுது முடிவு பெற்றுள்ளன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, as a Member of the Committee on Estimates I had an occasion to see that area--the other Members of the Committee also saw it. It is really a very dry area and it gives an appearance of almost a desert and it remains in the rain-shadow area and by the side of the Vaigai Dam. Unless some special scheme is implemented, the area cannot be improved and the green revolution cannot take place. So may I know whether the present proposal will be implemented as early as possible ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாக அந்தப் பகுதியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். கேள்வி, ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்கான நீர் வழங்குத் திட்டத்தைப்பற்றியது. முதல் கட்டமாக இந்தக் காரியம் நடைபெறுகிறது. அவர்கள் சொன்னதையும் மனத்திலே கொண்டு அந்தப் பகுதி மேலும் முன்னேறுவதற்கான வழி வகைகளை அரசு ஆராயும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : I only stated about Andipatti and not other areas.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி குடி தண்ணீர்த் திட்டத்திற்காகத் தேவைப்படும் தண்ணீர் வைகை

@ 673-676 பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.